அம்மா அவர்களின் அரசு புதிய தொடக்கப் பள்ளி தொடங்கிட நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை பேரூராட்சி மற்றும் சுற்று வட்டாரக் கிராமப் பகுதிகளில் சுமார் 30,000-க்கும் மேற்பட்ட ஆதி திராவிட மக்கள் வசித்து வருகிறார்கள். இவர்களெல்லாம் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே ஒரு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மட்டும்தான் உள்ளது. அதோடு ஒரு C.S.I. கிறிஸ்துவ உயர்நிலைப் பள்ளி உள்ளது. மேலும் ஒக்கூர் வெள்ளையன் செட்டியார் மேல்நிலைப் பள்ளி உள்ளது. அரசுப் பள்ளிகள் வேறு ஏதும் இல்லை. ஆகவே விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கின்ற அந்த ஆதி திராவிட மக்களின் நலனைக் கருதி மானாமதுரையில் ஒரு ஆதி திராவிடர் நல பள்ளி தொடங்க மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மானாமதுரையில் மேல்நிலைப் பள்ளி தொடங்கப்படுமா என்று கோரியுள்ளார். மேல்நிலைப் பள்ளி புதிதாக உடனடியாகத் தொடங்க இயலாது. தொடக்கப் பள்ளிதான் தொடங்க இயலும். எனவே, தொடக்கப் பள்ளி தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 251, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2012 மே 10]
251—

மருத்துவமனை சீரமைப்பு

***2392—திரு. ப. மோகன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, சங்கராபுரம் அரசு மருத்துவமனையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11-05

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் அரசு மருத்துவமனை 44 படுக்கை வசதியுடன் வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. மேலும், ரூபாய் 65.85 இலட்சம் செலவில் வெளி நோயாளிப் பிரிவு, 12 படுக்கை வசதிகள் கொண்ட பிரிவு ஆகியவற்றிற்கான கட்டடப் பணிகள் முடிவுற்று தற்போது பயன்பாட்டில் உள்ளன. இம்மருத்துவமனைக்கு பிரசவ அறை, தயார்படுத்தும் அறை ஆகியவை கட்டுவதற்காக பொதுப் பணித் துறைமூலம் மதிப்பீடு கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பெற்றவுடன் இதனைக் கட்டுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு தேவையான ஒப்புதலை வழங்கும். மேலும், நவீன சமையல் கூடம் கட்டுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன் அவர்கள்.*

திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரத்திலுள்ள அரசு மருத்துவமனையில் போதுமான கட்டமைப்பு வசதிகள் இல்லை. மேலும், அங்கே போதுமான செவிலியர்களும், அடிப்படை ஊழியர்களும் இல்லை. சவக் கிடங்கு*

சீர்கேடான நிலையிலேயே இருக்கின்றது என்பதை அவைக்குத் தெரிவித்து, அது சரிசெய்யப்படுமா என்பதை நம்முடைய பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக் கூடம் உரிய வகையில் சீரமைக்கப்பட்டுள்ளது. மேலும், போதிய மின் விளக்குகள் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது. கூடிய விரைவில் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும். தற்சமயம் சங்கராபுரம் அரசு மருத்துவமனையில் 7 செவிலியர்களும், போதுமான அடிப்படை ஊழியர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும், தேவைகளைக் கண்டறிந்து போதிய செவிலியர்களும், அடிப்படைப் பணியாளர்களும் பணியமர்த்தப்படுவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 252, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

252—

குடமுழுக்கு

***7348—திரு. வி.எஸ். இராஜி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதி, இலத்தூர் ஒன்றியம், செங்காட்டூரிலுள்ள அருள்மிகு தாயாரம்மாள் சென்னகேசவப் பெருமாள் கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?